SODK_ Konferenz der kantonalen Sozialdirektorinnen und Sozialdirektoren
CDAS_ Conférence des directrices et directeurs cantonaux des affaires sociales
CDOS_ Conferenza delle direttrici e dei direttori cantonali delle opere sociali

**பாதிக்கப்பட்டோர் உதவி மையம் சுவிட்சர்லாந்து**
***உங்களுக்கு சுவிட்சர்லாந்தில் ஏதாவது கேடு (பாதிப்பு) நேர்ந்ததா? இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று உங்களுக்குத் தெரியவில்லையா? அப்படியாயின் பாதிக்கப்பட்டோர் உதவி மையத்தை நாடவும்.***
நீங்கள் சுவிட்சர்லாந்தில் ஒரு குற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா? உதாரணமாக நீங்கள்

- ஒரு கொள்ளை சம்பவத்தால் காயமடைந்தீர்களா?
- பாலியல் வன்முறைக்கு, பாலியல் துன்புறுத்தலுக்கு அல்லது துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியிருக்கிறீர்களா?
- உங்கள் கணவர் அல்லது மனைவி அல்லது உங்கள் பெற்றோர்கள் கொடுமைப்படுத்தியிருக்கிறார்களா? அடித்திருக்கிறார்களா?
- ஒரு வாகன விபத்தால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?

அவ்வாறாயின் பாதிக்கப்பட்டோர் உதவி மையத்தின் உதவியைப் பெறுவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

**பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையம் யாருக்கானது?**
பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையம், சுவிட்சர்லாந்தில் ஒரு குற்றத்தால் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் பாதிப்புக்குள்ளானவர்கள் அனைவருக்குமானது.

- உங்கள் பாலினம், வயது, பாலியல் சேர்க்கைத் தேர்வு அல்லது மதம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு, அனைவருக்கும் பொதுவானது.
- நீங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர் அல்லது எத்தனை காலம் சுவிட்சர்லாந்தில் இருக்கிறீர்கள் என்ற வரைமுறைக்கு அப்பாற்பட்டு அனைவருக்கும் பொதுவானது.

நீங்கள் பாதிக்கப்பட்டிருக்காவிடின், உங்களுக்குத் தெரிந்த யாராவது பாதிக்கப்பட்டிருப்பின், அவர்களுக்கு நீங்கள் உதவ முன்வரும் பட்சத்திலும் பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையம் கை கொடுக்கும்.

**பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையம் என்ன செய்கிறது?**
முதலில் பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையத்தில் பணி புரிபவர்கள் நீங்கள் சொல்வதைக் கேட்பார்கள். அங்கு நீங்கள் உங்களுக்கு நடந்ததை அவர்களுக்கு விவரிக்கலாம். அதன் பிற்பாடு நீங்கள் என்ன செய்யலாம் என்பதையும், உங்களுக்கு எத்தகைய உரிமைகள் இருக்கின்றன என்பதையும் அவர்கள் உங்களுக்கு எடுத்துரைப்பார்கள்.
அவர்கள் உங்களுக்குப் பின்வரும் உதவிகளை அளிக்கிறார்கள்:

- ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்வதற்கு அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.
- உங்களுக்கு ஒரு பாதுகாப்பான இடத்தைக் காண்பிப்பார்கள்.
- நீங்கள் உளவியல் ரீதியான அல்லது மருத்துவ ரீதியான உதவிகளைப் பெறுவதற்குத் துணை புரிவார்கள்.
- அல்லது மிகவும் அவசர நிலையில் பண உதவி பெற்றுத் தர உதவுவார்கள்.

பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையத்தில் பணி புரிபவர்கள் நிபுணர்கள். அவர்கள் நீங்கள் மீண்டும் தொடர்ந்து செயல்படுவதற்கு ஒரு தெளிவான நோக்கைப் பெறவும், முடிவெடுக்கவும் உங்களுக்கு உதவுவார்கள்.

**பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையத்தை அணுகுவது எப்படி?**
பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையங்கள் - ஆலோசனை மையங்கள் சுவிட்சர்லாந்து முழுவதும் இருக்கின்றன. நீங்கள் தொலைபேசி மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம். ஆலோசனை மையத்தில் ஒரு கலந்துரையாடலையும் நீங்கள் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

சுவிட்சர்லாந்திலுள்ள பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையங்கள் – ஆலோசனை மையங்கள் அனைத்தையும் இங்கு காணலாம் ➔

பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையம் அவசியப்பட்டால் மையத்தில் நிகழும் கலந்துரையாடலில் மொழிபெயர்ப்பாளர்களுடனும் இணைந்து பணியாற்றுவார்கள்.

உங்களுக்கு பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையம் சரியானதா என்ற சந்தேகம் இருப்பினும், எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையம் அந்தச் சந்தர்ப்பத்திலும் உங்களுக்கு யார் உதவ முடியும் என்பது பற்றிய தகவல்களை அளிக்கும்.

**கட்டணமற்றது, நம்பிக்கையானது மற்றும் அநாமதேயமானது**

பாதிக்கப்பட்டோருக்கான உதவி மையத்தின் ஆலோசனை இலவசம். அது நம்பிக்கையானது மற்றும் அநாமதேயம் பேணப்படும். உங்கள் விருப்பத்திற்கு மாறாக உங்கள் கதை யாருக்கும் தெரிவிக்கப்படாது. காவல்துறைக்குக் கூடத் தெரிவிக்கப்பட மாட்டாது.

**தொடர்பு கொள்ளுங்கள்.**

**உங்களுக்காக பாதிக்கப்பட்டோர் உதவி மையம் இங்குள்ளது.**

**அவசர காலத்தில்**

காவல்துறை 117

மருத்துவ உதவி 144

பாதுகாப்பு இடவசதி